| | | |
|---|---|---|
| தரம் :- 13 (2021) | வணிகக்கல்வி 32-T-1 | நேரம் : 2 மணித்தியாலம் |

அறிவுறுத்தல்கள்
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஓவ்வொரு வினாவிற்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

வினாத்தாள் 1

| வினா இல | புள்ளிகள் |
|---|---|
| 01-30 | ……… |
| 30-50 | ……… |
| மொத்தம் | ……… |

01. மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்யும் வணிகங்கள் சில கீழே தரப்படுகின்றன.

A- மாயா பாதணி விற்பனையகம்.

B- காமதேனு மோர் விற்பனை நிலையம்.

C- சக்தி இரத்த பரிசோதனை நிலையம்.

D- கபிலன் தனியார் பேரூந்து சேவை.

மேற்படிவணிகங்களினால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவைகள் முறையே,

1) பாதணி, மோர், இரத்தப்பரிசோதனை, தனியார் பேரூந்துச் சேவை.
2) ஆடை, உணவு, சுகாதாரம், போக்குவரத்து.
3) பாதணி, மோர், சுகாதாரம், போக்குவரத்து.
4) ஆடை, உணவு, இரத்தப்பரிசோதனை, போக்குவரத்து.
5) பாதணி, உணவு, சுகாதாரம், தனியார் பேரூந்துச் சேவை. (……….)

02. ராகுலன் பல்பொருள் வாணிபம் தற்போதைய கொவிட் 19 நோய்த்தொற்றுக் காரணமாக அரசு பொது முடக்கம் செய்யும் போது மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை மொத்தமாகக் களஞ்சியப்படுத்தி நியாயமான விலையில் உரிய காலத்தில் விற்பனை செய்து வருகின்றார்.

மேற்படி ராகுலன் பல்பொருள் வாணிபம் ஒரு,

1) பொருள் உற்பத்தி வணிகமாகும்.
2) பொருள் மற்றும் சேவை உற்பத்தி வணிகமாகும்.
3) சேவை உற்பத்தி வணிகமாகும்.
4) உற்பத்தி வணிகமாகும்.
5) சில்லறை விற்பனை வணிகமாகும். (……….)

03. வணிகத்திற்கு அக்கறை கொள்ளும் தரப்பினர் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் சில கீழே தரப்படுகின்றன.

A- உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு.

B- பொருள் அல்லது சேவை தொடர்பான சந்தைப்பாதுகாப்பினை பெற்றுக்கொள்வதற்கு.

C- வணிகத்தின் வாழ்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு.

D- தொடர்ச்சியாக தேவையான நிதியினை ஈட்டிக் கொள்வதற்கு.

மேற்படி விடயங்களைப்பெற எதிர்பார்க்கும் அக்கறை கொள்ளும் தரப்பினர் முறையே,

1) உரிமையாளர், அரசு, ஊழியர்கள், கடன் கொடுநர்கள்.
2) கடன் கொடுநர்கள், வாடிக்கையாளர்கள், அரசு, உரிமையாளர்கள்.
3) உரிமையாளர், அரசு, ஊழியர்கள், வாடிக்கையாளர்கள்.
4) அரசு, வாடிக்கையாளர்கள், உரிமையாளர்கள், கடன் கொடுநர்கள்.
5) அரசு வாடிக்கையாளர்கள், உரிமையாளர்கள், ஊழியர்கள். (……….)

04. பின்வரும் வணிகச் சூழல் காரணிகளுள் அண்மிய சூழல் காரணியாகக் கருதப்பட முடியாதது.

1) வாடிக்கையாளர் 2) உரிமையாளர் 3) போட்டியாளர்
4) வழங்குநர்கள் 5) பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளர் (……….)

05. மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன் வளர்ப்பை மேற்கொள்கின்றது. மேற்படி செயற்பாட்டினை கழிவுப்பொருள் முகாமைத்துவ 4R எண்ணக்கருவின்படி எவ் எண்ணக்கருவிற்குள் உள்ளடக்கலாம்?

1) மீள் சுழற்சி (Recycle) 2) மீள் பாவனை (Reuse)
3) பாவனையைக் குறைத்தல் (Reduce) 4) மீள் உருவாக்கம் (Replace)
5) மேற்கூறிய எவையுமல்ல (……….)

06. அரசாங்கத்தின் வரி வருமான வகைகள் X நிரலிலும் அவற்றிற்கான உதாரணங்களை Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1) வருமானவரி | A- மொத்த சில்லறை வியாபாரத்தின் மீது சேர்க்கப்பட்ட பெறுமதியடிப்படையிலான வரி. |
| 2) உற்பத்தி / கலால் வரி | B- உழைக்கும் போது செலுத்தும் வரி |
| 3) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | C- மோட்டார் வாகன இறக்குமதி வரி |
| 4) இறக்குமதியின் மீதான வரி | D- சிகரெட், புகையிலை மதுபானம் போன்ற உற்பத்திகளின் மீது விரிக்கப்படும் வரி |

X நிரலில் காட்டப்பட்டுள்ள வரி வருமான வகைகளுக்கேற்ப Y நிரலில் தரப்பட்டுள்ள அவற்றிற்கான உதாரணங்களை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) B D C A  2) D B C A  3) A B D C  4) A B C D  5) B D A C

(……….)

07. **கூற்று A :-** நுகர்வோரின் உயிர் ஆதனங்களுக்குத் தீங்கை ஏற்படுத்தக்கூடிய பொருட்களை விற்றல், சேவைகளை வழங்குதல் என்பவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை செயற்படுகின்றது.

**கூற்று B :-** முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் நுகர்வோருக்கு போட்டி விலையில் பொருட்கள் சேவைகளைத் தேவையான அளவில் வழங்குவதற்கு உறுதியளித்தலை நோக்கமாகக் கொண்டு இலங்கை தரக்கட்டளை பணியகம் செயற்படுகின்றது.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்களிலும்,

1) A சரியானது B தவறானது.
2) B சரியானது A தவறானது.
3) A மற்றும் B ஆகிய இரண்டும் தவறானது.
4) A மற்றும் B ஆகிய இரண்டும் சரியானது.
5) A யும் B யும் சரியானது என்பதுடன் B யினூடாக A விபரிக்கப்படவில்லை. (……….)

08. வணிக அமைப்புக்களின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.

A- வரையறுக்கப்படாத பொறுப்புக் காணப்படல்.
B- ஜனநாயக ரீதியான நிருவாகம் காணப்படல்.
C- சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்துக் காணப்படல்.
D- பங்கு வழங்கல் மேற்கொள்ளப்படுவதில்லை.

மேற்கூறிய பண்புகள் காணப்படும் வணிக அமைப்புக்களை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

1) கூட்டுறவு வணிகம், தனியுரிமை வணிகம், உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி, கூட்டுத்தாபனம்.
2) தனியுடைமை வணிகம், கூட்டுறவு வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி.
3) பங்குடைமை வணிகம், கூட்டுறவு வணிகம் அரச திணைக்களங்கள், கரைகடந்த கம்பனிகள்.
4) தனியுரிமை வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள், அரச கம்பனிகள்.
5) கூட்டுறவு வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், அரச திணைக்களங்கள், அரச கம்பனிகள். (……….)

09. சிறிய நடுத்தரளவு வணிகங்களின் பண்பாகக் கருதப்பட முடியாதது,
1) சந்தை சிறியதாக இருத்தல்.
2) மூலதனத்தின் அளவு குறைவாக இருத்தல்.
3) குறைந்த ஊழியர் எண்ணிக்கை.
4) நவீன தொழில்நுட்ப பாவனை அதிகமாக இருத்தல்.
5) குடும்பத்தின் உழைப்பு கூடுதலாகக் காணப்படல். (……….)

10. பின்வருவன இலங்கையிலுள்ள நிதி நிறுவனங்கள் சிலவாகும்.
A- உத்தரவு பெற்ற விஷேட வங்கி.
B- கூட்டுறவு கிராமிய வங்கி.
C- ஊழியர் நம்பிக்கை நிதியம்.
D- சந்தைத் தரகர்கள்.
E- இலங்கை மத்திய வங்கி.
F- முதல்நிலை வழங்குநர்கள்.
G- காப்புறுதிக் கம்பனிகள்.
H- முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள்.

மேற் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களில் விசேட நிதி நிறுவனங்களை மட்டும் கொண்ட விடைத்தொகுதியாக அமைவது.
1) A, C, E  2) D, F, H  3) D, E, F  4) A, F, H  5) B, F, H
(……….)

11. காசோலை தொடர்பாக சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.
1) நடைமுறைக் கணக்கொன்றின் உரிமையாளரே காசோலை வரைவோர் ஆவார்.
2) புறக்குறிப்பிடலின்றி காவியின் காசோலையை இன்னொருவருக்கு ஒப்படைக்க முடியாது.
3) காசோலைக்கு மேலதிக பாதுகாப்பினை வழங்குவதற்காக புறக்குறிப்பிடல் மேற்கொள்ளப்படுகின்றது.
4) காசோலையொன்று சட்ட ரீதியாகச் சாட்டப்பட்டது என்பது புறக்குறிப்பிடல் மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது.
5) காசோலையொன்றின் கோடுகளுக்கிடையே "கைமாற்றத்தகாதது" என்ற சொல் எழுதப்பட்டிருந்தாலும் அக்காசோலையினைக் கைமாற்ற முடியும். (……….)

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களில் எத்தனை கூற்றுக்கள் சரியான கூற்றுக்களாக அமைகின்றன?
1) ஒன்று  2) இரண்டு  3) மூன்று  4) நான்கு  5) ஐந்து
(……….)

12. ரூபா 1,500,000 இற்கு காப்புறுதி செய்யப்பட்ட ஐங்கரனின் வணிகக் கட்டடத்தில் ஒரு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்துக்கு இழப்பீடாக மதிப்பிடப்பட்ட ரூபா 1,000,000 அவருக்கு வழங்கப்பட்டது. ரூபா 1,000,000 மாத்திரம் இழப்பீடாக வழங்கப்பட்டதற்கு ஏதுவான காப்புறுதித்தத்துவம்.
1) காப்புறுதி செய்யும் உரிமை ஆகும்  2) உயர் நம்பிக்கைத் தத்துவம் ஆகும்
3) இழப்பீட்டுத் தத்துவம் ஆகும்  4) பதிலாள் வைப்புத் தத்துவம் ஆகும்
5) அண்மிய காரணி ஆகும் (……….)

13. கீழே சமிக்ஞைகளும், குறியீடுகளும் என்ற தொடர்பாடல் ஊடகத்திற்கான உதாரணங்கள் பின்வரும் தொடர்புகள் மூலம் காட்டப்படுகின்றன. இவற்றுள் சரியான தொடர்பினைக் காட்டும் விடையின் இலக்கத்தைத் தெரிவு செய்க.

1) அகரீதியான ⟶ இலத்திரனியல் அல்லாத ⟶ சமிக்ஞை.
2) புறரீதியான ⟶ இலத்திரனியல் ⟶ அம்பியுலன்ஸ் சமிக்ஞை.
3) புறரீதியான ⟶ இலத்திரனியல் அல்லாத ⟶ மின் சமிக்ஞைகள் (Colour light)
4) அகரீதியான ⟶ இலத்திரனியல் அல்லாத ⟶ பொதியிடல் குறியீடுகள்.
5) புறரீதியான ⟶ இலத்திரனியல் அல்லாத ⟶ நிறுவன அமைவிடத்தைக் காட்டும் வரைபடம். (……….)

14. ‘பேரூந்துச் சேவையில் பயன்படுத்தும் எரிபொருள் பாவனையைக் குறைப்பதற்காக அரசு மின்சாரத்தில் இயங்கும் பேரூந்துகளை இறக்குமதி செய்வதற்கு இவ்வருடம் தீர்மானித்துள்ளது.

இக்கூற்றில் வலியுறுத்தப்படும் போக்குவரத்தின் அடிப்படைக் கூறுகளாக அமைவது,

1) சக்தி, ஊடகம் 2) சக்தி, தரிப்பிடம் 3) தரிப்பிடம், பாதை
4) தரிப்பிடம், ஊடகம் 5) பாதை, சக்தி (……….)

15. வியாபாரத்தின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.

A- மீள் விற்பனை நோக்கில் பொருட்களை கொள்வனவு செய்தல்.
B- பல்வேறு வகையான பொருட்களை விற்பனைக்காக முன்வைத்தல்.
C- நுகர்வோர்களுடன் நெருங்கிய தொடர்பினை பேணிச்செல்ல முடிதல்.
D- சந்தை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படல்.
E- வியாபாரக் கழிவுகள் வழங்கப்படல்.
F- இறுதி நுகர்விற்காக பொருட்கள் அல்லது சேவைகள் விற்பனை செய்யப்படல்.
G- மொத்தமாகப் பொருட்கள் விற்பனை செய்யப்படல்.

மேற்கூறிய பண்புகளில் சில்லறை வியாபாரத்தின் பண்புகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியாக அமைவது,

1) A, D, E 2) A, B, G 3) B, D, F 4) C, F, G 5) B, C, F
(……….)

16. பின்வரும் கூற்றுக்களில் இருந்து பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) ஒழுங்கமைத்தலின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு செய்ய வேண்டிய செயற்பாடுகளை இனங்காணலும், தொழில் உருவாக்கமும் ஒழுங்கமைத்தலின் முதலாவது செயற்பாடாகும்.
2) ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய ஊழியரின் எண்ணிக்கை கட்டுப்பாட்டு விசாலம் எனப்படும்.
3) ஒழுங்கமைப்பில் உயர் முகாமையிலிருந்து கீழ் மட்ட முகாமையாளர் வரை முறிவடையாது செல்கின்ற அதிகார வழி கட்டளையிடலில் ஒருமைப்பாடு எனப்படும்.
4) வேலைப்பகிர்வின் ஊடாக வேலையில் சிறப்புத்தேர்ச்சி ஏற்படுகின்றது.
5) ஒரு ஊழியர் ஒரு மேற்பார்வையாளருக்கு மாத்திரம் பொறுப்புக்கூற வேண்டும் என்பது கட்டளையிடலில் ஒருமைப்பாடு எனப்படும். (……….)

17. நெறிப்படுத்தல் கருமங்களின் முக்கியத்துவங்கள் சில கீழே தரப்படுகின்றது.

A- ஊழியர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்ள முடியும்.

B- தீர்மானமெடுத்தலுக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

C- மனித வளத்தை முகாமைத்துவம் செய்வதற்கு.

D- ஊழியர் விலகல் குறைவடைதல்.

E- நிறுவனக் கருமங்களைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்துவதற்கு.

F- வளங்களில் இருந்து உச்ச பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

G- ஊழியர்களின் விசேட திறன்களிலிருந்தும், தேர்ச்சிகளிலிருந்தும் அனுகூலங்களை பெற முடியும்.

மேற்குறிப்பிட்டவற்றுள் ஊக்கப்படுத்தல், தொடர்பாடல் கருமங்களின் நன்மைகளை எடுத்துக்காட்டும் விடையாக அமைவது முறையே.

| **ஊக்கப்படுத்தல்** | **தொடர்பாடல்** |
|---|---|
| 1) A, B, D | C, E, F, G |
| 2) A, D, F, G | B, C, E |
| 3) A, D, E, G | B, C, F |
| 4) C, D, F | A, B, E, G |
| 5) A, B, F, E | C, D, G |

(……….)

18. ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பின்பற்றப்பட்ட இரண்டு கட்டுப்பாட்டு நுட்பங்கள் கீழே தரப்படுகின்றது.

A- ஆடை தைக்கும் ஊழியர்களை பயிற்றுவித்தல் மூலம் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களாக மாற்றுதல்.

B- ஆடை உற்பத்தி செயன்முறை இடம்பெறும் போது மேற்கொள்ளப்பட்டு வரும் தரக்கட்டுப்பாடு.

மேற்குறிப்பிட்ட கட்டுப்படுத்தல் நுட்பங்கள் இனங்காணப்படும் முறையாக அமைவது.

| **A** | **B** |
|---|---|
| *1)* தவிர்த்தல் / முன்னூட்டல் கட்டுப்பாடு | திருத்துதல் / பின்னூட்டல் கட்டுப்பாட்டு |
| *2)* தவிர்த்தல் / முன்னூட்டல் கட்டுப்பாடு | நடைமுறை / செயன்முறைக் கட்டுப்பாடு |
| *3)* திருத்துதல் / பின்னூட்டல் கட்டுப்பாடு | நடைமுறை / செயன்முறைக் கட்டுப்பாடு |
| *4)* நடைமுறை / செயன்முறைக் கட்டுப்பாடு | தவிர்த்தல் / முன்னூட்டல் கட்டுப்பாடு |
| *5)* திருத்தல் / பின்னூட்டல் கட்டுப்பாடு | தவிர்த்தல் / முன்னூட்டல் கட்டுப்பாடு |

(……….)

19. வித்தகன் என்பவர் சமூகவலைத்தளங்களில் விளம்பரம் செய்வதன் மூலம் விசேட வைபவங்களுக்குத் தேவையான அலங்கார வளைவுகளைத் தயாரித்து நிகழ்வுகளை வித்தியாசமான முறையில் அலங்கரிக்கும் வணிகமொன்றை நடாத்தி வருகின்றார். வித்தகன் பயன்படுத்தும் உற்பத்தி முறையாகக் கருதப்படுவது.

*1)* கணனி ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்தி (CIM)

*2)* தொகுதி உற்பத்தி (Batch Production)

*3)* கட்டளை உற்பத்தி (Job Production)


*4)* கணனி உதவியுடனான உற்பத்தி (CAM)

*5)* பாய்ச்சல் உற்பத்தி (Flow Production) (……….)

20. பொருளாதாரக் கட்டளையின் அளவினைக் கணிப்பீடு செய்வது
   1) பேணல் கிரயத்தினையும், மொத்தக் கிரயத்தினையும் இழிவுபடுத்திக் கொள்வதற்காகும்.
   2) மொத்த இருப்புக் கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்வதற்கும், மொத்தக் கேள்வியை அறிந்து கொள்வதற்காகும்.
   3) இருப்பை விலை இடுவதற்கும், மொத்தக் கேள்வியை இழிவுபடுத்திக் கொள்வதற்குமாகும்.
   4) இருப்பை விலை இடுவதற்கும், கட்டளைக் கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்வதற்குமாகும்.
   5) இருப்புப் பேணல் கிரயத்தையும், கட்டளைக் கிரயத்தையும் இழிவுபடுத்திக் கொள்வதற்குமாகும். (……….)

21. உற்பத்தியானது சமகாலத்தில் தனிநபர் / தேவைகள் சிக்கல் கொண்டவையாக இருப்பதால் உற்பத்திக்காக பல்வேறு உருப்படிகள் சேர்க்கப்பட்ட வண்ணம் உள்ளன. அந்த வகையில் ‘நிகழ்வுகள்’ என்ற உற்பத்திக்கு உதாரணமாக அமைவது.
   1) போக்குவரத்து.
   2) மலை ஏறுபவர்களுக்கு பயிற்சி வழங்கல்.
   3) மிகிந்தலை.
   4) செஞ்சிலுவைச் சங்கம்.
   5) வாசிப்பு மாதத்தில் நடைபெறும் புத்தகக் கண்காட்சி. (……….)

22.




மேலே படத்தில் பொருளொன்றின் வாழ்க்கைச்சுற்றோட்டம் காட்டப்படுகிறது. அந்தவகையில் 1, 2, 3, 4 ஆகிய இலக்கங்களால் குறிக்கப்படும் விடயங்களை உள்ளடக்கிய விடைத்தொகுதியாக அமைவது.
   1) 1 – முதிர்ச்சிக்கட்டம், 2 – விற்பனை, 3 – இலாபம், 4 – அறிமுகக்கட்டம்.
   2) 1 – முதிர்ச்சிக்கட்டம், 2 – இலாபம், 3 – விற்பனை, 4 – அறிமுகக்கட்டம்.
   3) 1 – அறிமுகக்கட்டம், 2 – இலாபம், 3 – விற்பனை, 4 – முதிர்ச்சிக் கட்டம்.
   4) 1 – அறிமுகக்கட்டம், 2 – விற்பனை, 3 – இலாபம், 4 – முதிர்ச்சிக் கட்டம்.
   5) 1 – அறிமுகக்கட்டம், 2 – முதிர்ச்சிக் கட்டம், 3 – விற்பனை, 4 – இலாபம். (……….)

23. பின்வரும் மேம்படுத்தல் கலவை மாறிகளில் ‘நிகழ்வு அல்லது அனுபவம்’ என்பதற்கான மாறிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
   1) காணொளி நாடா, சுவரொட்டி, அசையும் உருவங்கள், வெளியீடுகள்.
   2) விலைக்குறைப்பு, விலைக்கோவை, பரிசளிப்பு, சீட்டிழுப்பு.
   3) அனுசரனை, உரையாற்றல், செய்தித்தொடர்பு, வருடாந்த அறிக்கை.
   4) பொழுபோக்கு, சுற்றுலா, பாடநெறிகள், வீதி நாடகங்கள்.
   5) நேரடித் தபால், இலத்திரனியல் விற்பனை, தொலைபேசி மூலமான விற்பனை, வலைப்பின்னல். (……….)

24. மாற்று நிதியீட்டல் வழிமுறைகளில் ஒப்பீட்டு ரீதியிலான அனுகூலங்கள் சில கீழே தரப்படுகின்றது.

A) கிரயம் குறைவாகவிருத்தல்.

B) பாரிய நிதிப்பெறுப் பெறுமானமொன்றைப் பெற்றுக் கொள்ள முடிதல்.

C) பெற்றுக்கொள்வது இலகு.

D) மீளச் செலுத்த வேண்டிய தேவையில்லை.

E) வணிகத்தின் உரிமைத்துவத்தை விரிவாக்க முடிதல்.

F) வணிகப்பொறுப்புக்கள் அதிகரிக்காமை

மேற்குறிப்பிட்டவற்றுள் உள்ளக ரீதியிலான நிதியீட்டல் வழிமுறைகளின் அனுகூலங்கள் எத்தனை காணப்படுகின்றது?

1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று 4) ஐந்து 5) நான்கு

(……….)

25. பின்வரும் நிதி விகிதங்களில் திரவத்தன்மை விகிதமாகக் கருதப்படக் கூடியது.

1) நடைமுறை விகிதம் (Current Ratio)
2) முதலீட்டின் திரும்பல் விகிதம் (Return on Investment)
3) வட்டிக் காப்பு விகிதம் (Interest Coverage Ratio)
4) இருப்பு புரள்வு விகிதம் (Turnover Ratio)
5) கடன் உரிமை விகிதம் (Dent – equity Ratio) (……….)

26. மனிதவள முகாமைத்துவத்தில் பயிற்சி அபிவிருத்தி என்பன தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A- எதிர்காலத் தொழில் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்னரான செயற்பாடுகளைக் காட்டுகின்ற செயன்முறையாகும்.

B- ஒப்பீட்டு ரீதியில் குறுங்கால வேலைத் திட்டமாகும்.

C- நிகழ்காலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்விளைவினைக் காட்டும் செயன்முறையொன்றாகும்.

D- ஒப்பீட்டு ரீதியில் கூடிய செலவினை ஏற்க வேண்டியிருத்தல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் அபிவிருத்தி மற்றும் பயிற்சிக்கான கூற்றுக்களாக அமையும் சரியான விடைத்தொகுதியாக அமைவது,

| | **அபிவிருத்தி** | **பயிற்சி** |
|---|---|---|
| 1) | C, B | A, D |
| 2) | A, C | B, D |
| 3) | A, D | C, B |
| 4) | A, B | C, D |
| 5) | C, D | A, B |

(……….)

27. பின்வருவனவற்றுள் ஊழியர் பொறுப்பொன்றாகக் கருதப்பட முடியாதது.
   1) அமைப்பின் நோக்கம் நிறைவேறக்கூடிய வகையில் வேலை செய்தல்.
   2) நிறுவனத்தின் இரகசியங்களை வெளியகப் பிரிவினருக்கு வழங்காதிருத்தல்.
   3) வேலைத் தளத்தில் சிறப்பாக நடந்து கொள்ளல்.
   4) தொழில் ஒப்பந்தத்திற்கேற்ப கருமங்களை நிறைவேற்றல்.
   5) நிறுவனத்தில் ஆதனங்கள் மற்றும் உபகரணங்களை உரியவாறு பயன்படுத்தல்.

(……….)

28. அமைப்பொன்றின் உயர்மட்ட முகாமையாளர்களுக்கு வணிகத்தின் உள்ளக மற்றும் வெளியகப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்மானங்களையெடுப்பதற்குத் துணையாக அமைகின்ற தகவல் முறையாக அமைவது,
   1) அறிவு மட்டத்தகவல் முறைமை.
   2) செயற்பாட்டு மட்டத்தகவல் முறைமை.
   3) முகாமைத்துவ மட்டத்தகவல் முறைமை.
   4) தந்திரோபாய மட்டத்தகவல் முறைமை.
   5) அலுவலக தன்னியக்க முறைமை. (……….)

29. தரவுகளைத் தகவல்களாகப் பரிமாற்றம் செய்யும் கருவி அல்லாதது,
   1) உள்ளீடு   2) வகைப்படுத்தல்   3) களஞ்சியப்படுத்தல்
   4) வெளியீடு   5) பின்னூட்டல்   (……….)

30. சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A) போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள்.
   B) விலை உபாய வழிமுறைகள்.
   C) போட்டியாளர்களின் விலை உபாய வழிமுறைகள்.
   D) மேம்படுத்தல் உபாய வழிமுறைகள்.

   இவற்றுள் உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளில் உள்ளடக்கப்படும் தகவல்களாவன.

   1) A யும் B யுமாகும்   2) A யும் D யுமாகும்   3) B யும் C யுமாகும்
   4) B யும் D யுமாகும்   5) C யும் D யுமாகும்   (……….)

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான சொற்களை இட்டு பூரணப்படுத்துக.**

31. அ) வியாபாரம் மற்றும் துணைச் சேவைகளின் சேர்க்கை ……………………….. எனப்படுவதோடு ……………………………… காரணமாக துணைச் சேவைகளின் வளர்ச்சி ஏற்பட்டது.

   ஆ) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வகைப்படுத்தலின் பிரகாரம் மீள் சுழற்சி என்பது …………………………. க்கு உரித்தான பொருளாதார நடவடிக்கையாகும்.

32. அ) பின்வரும் சந்தர்ப்பங்களில் தொடர்புபடும் வணிகச்சூழல் காரணிகளை இடைவெளியில் குறிப்பிடுக.
   i) தற்போதைய கொவிட் - 19 நோய்தொற்று நிலைமை காரணமாக பொருட்கள் சேவைகளின் விலைமட்டங்களானது அதிகரித்துக் கொண்டு செல்லல் ……………………………………

   ii) XYZ நிறுவனத்தின் கணினி இயக்குநர்கள் மிகவும் திறன் வாய்ந்தவர்களாகக் காணப்படல் ……………………………………………………………………………………………..

ஆ) மொடேர்ன் ஆடை உற்பத்தி வணிகத்தின் முகாமையாளர் வணிகத்தின் சாதாரண இலாபத்தை அதிகரிப்பதன் மூலம் ……………………….. க்குரிய சமூகப் பொறுப்பினையும் நிறுவனத்தின் அருகாமையில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதன் ……………………... இன் சமூகப்பொறுப்பினையும் நிறைவேற்றுகின்றார்.

33. அ) வணிகத்தின் வகைகள் மற்றும் வணிகத்தை வகைப்படுத்தும் நியதிகள் தொடர்பான அறிவினைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| விபரம் | உரிமை | நோக்கம் |
|---|---|---|
| 1) இரண்டு ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் வெதுப்பகம் | தனியார் | ………………….. |
| 2) வணிக வங்கிகள் | …………………… | இலாபம் |
| 3) குறைந்த கட்டணத்திலான போக்குவரத்துச் சேவை வழங்கும் கூட்டுறவு வணிகம் | …………………… | ………………….. |

ஆ) பின்வரும் செயற்பாடுகளுக்குரிய முயற்சியாண்மைத் திறன்களை இடைவெளியில் குறிப்பிடுக.

i) தனக்கு கீழ் பணிபுரிவோர்களைக் கொண்டு கருமங்களை நிறைவேற்ற அவர்களை ஊக்கப்படுத்தி நெறிப்படுத்துதல் ……………………………………………………..

ii) உள்ளக, வெளியகப் பிரிவினர்களுடன் சிறந்த இடைத்தொடர்பினைப் பேணல். ………………………………………………………………

34. அ) …………………….. பணமானது சட்டப்பணத்தைப் போன்று 100% திரவத்தன்மை காணப்படாவிடினும் ……………………….. பணத்தை விடக்கூடிய திரவத்தன்மை கொண்டதாகும்.

ஆ) எழுத்து மூலமான தொடர்பாடல் செயன்முறையில் அதில் கையொப்பம் இடுபவர் அல்லது நிறுவனம் ……………………….. ஆகக் காணப்படுவதுடன், பெறுபவரால் பெறப்பட்ட செய்தி தொடர்பாகச் செயற்படும் முறை ……………………………….. ஆகும்.

35. அ) அமையவியல் (Logistics) செயல்முறையின் அசைவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன. கீறிட்ட இடத்தில் பொருத்தமான அமையவியல் செயல்முறையினைக் குறிப்பிடுக.

வழங்குநர் ⟶ உற்பத்தியாளர் ⟶ மொத்தவியாபாரி ⟶ சில்லறை வியாபாரி ⟶ நுகர்வாளர்

⟵(i) ……………………………… ⟶ ⟵(ii) ……………………………………… ⟶

ஆ) தெற்காசிய நாடுகள் எட்டினது பொரளாதார மற்றும் அரசியல் அமைப்பாகக் …………….. …………………. காணப்படுவதுடன், வளமான எழுச்சிக்காக கருமமாற்றுதல், வறுமையைக் குறைத்தல் என்பன ……………………………….. இன் பிரதான இலக்காகும்.

36. அ) முகாமைத்துவத்தில் உத்தேச நிலைமைக்கும், தற்போதைய நிலைமைக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்ற போது அது (1) ……………………..………………….. எனப்படுவதோடு, (2) …………………………….. என்பது மாற்று முறைகளில் பொருத்தமானதொன்றைத் தெரிவு செய்தலாகும்.

ஆ) ஏதேனும் விசேட துறைக்குரிய ஏதேனும் கருமங்களைச் செய்வதற்கு முகாமையாளரொருவரிடம் காணப்பட வேண்டிய (1) ………………………… (2) ……………………….., ஆற்றல் தொழில்நுட்பத்திறன் எனப்படும்.

37. அ) பின்வரும் சமன்பாட்டில் உள்ள இடைவெளிகளை பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

சமப்பாட்டுப் புள்ளி அலகுகளின் எண்ணிக்கை = (1) ………………………………………… / அலகொன்றிற்கான பங்களிப்பு

(2) ………………………………………… = அலகொன்றின் விற்பனை விலை - அலகொன்றின் மாறும் கிரயம்

ஆ) இலக்கு சந்தையினை அடைந்து கொள்வதற்காக சந்தைப்படுத்துவோர் பயன்படுத்துகின்ற பல்வேறு உட்பிரவேச முறைகள் ………………………….. எனப்படும்.

38. கொள்வனவாளர் பொருளொன்றைக் கொள்வனவு செய்யும்போது கருத்தில் கொள்ளப்படுகின்ற பிரதான காரணி ……………………………. ஆவதோடு, அதனைத் தீர்மானிக்கும் போது (1)…………………………….., (2) ………………………………., (3) …………………………… என்பவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

39. அ) பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகுளைக் கொள்வனவு செய்தல் விற்பனை செய்தல் என்பவற்றைக் கண்காணிக்கின்ற நிறுவனம். ……………………………………………….. ஆகக் காணப்படுவதோடு இது ………………………………………………..…….. வரையறுக்கப்பட்ட கம்பனியாகும்.

ஆ) பதவியில் இணைக்கப்பட்ட புதிய ஊழியரொருவரை பதவியில் நிரற்தரமாக்க முன்னர் சேவை செய்ய வேண்டிய காலப்பகுதி ………………………………. எனப்படும்.

40. அ) தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்த மூன்று துறைகளாக (1) கணித்தல் தொழில்நுட்பம் (2) ………………………… (3) …………………………… காணப்படுகின்றது.

ஆ) வணிகத்திட்டத்தில் மதிப்பிடப்பட்ட கருச்செயற்பாட்டுத்திட்டக் கிரயத்தினுள் (1) மொத்த நிலையான கிரயம் (2) ………………………….. (3) ………………………… என்பன உள்ளடங்குகின்றன.

- **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை எழுதுக.**

41. பின்வரும் எண்ணக்கருக்களைக் குறிக்கும் சொற்பதங்களை இடைவெளியில் குறிப்பிடுக.

i) தனக்குத் தேவையானதை தானே உற்பத்தி செய்தல். ……………………………………...
ii) தனிநபர் சிறப்புத்தேர்ச்சியின் விளைவாக ஏற்பட்டமை. ……………………………..……
iii) வணிகப்பரம்பலின் முதலாவது படிமுறை ……………………………..……
iv) சந்தைத் தேவைக்காக உற்பத்தி செய்வது ……………………………..……

42. சூழலின் நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக வணிகங்கள் செயற்படும் பொழுது விசேடமாகக் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

1) ………………………………………………………………………………………….
2) ………………………………………………………………………………………….
3) ………………………………………………………………………………………….
4) ………………………………………………………………………………………….

43. அரச துறை (பொது) வணிக அமைப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1) …………………………………………. 2) ………………………………………………..
3) …………………………………………. 4) ………………………………………………..

44. இலத்திரனியல் பணவகைகள் நான்கின் பெயர்களைத் தருக.

1) …………………………………………… 2) ……………………………………………
3) …………………………………………… 3) ……………………………………………

45. வியாபாரம் தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் குறிப்பிடுக.

i) முதல்வரின் சார்பாக பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொழுது அல்லது விற்பனை செய்யும் பொருது அக்கொடுக்கல் வாங்கல்களை தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளப்படும் முகவர் காரணிகர் ஆவார். ( )

ii) ஏதாவது நாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நாட்டினுள் கொண்டு வந்து அவற்றில் மாற்றங்களைச் செய்து அல்லது செய்யாது மீளவும் வேறொரு நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு அனுப்புதல் இறக்கியேற்றல் வியாபாரம் எனப்படும். ( )

iii) குத அனுமதிப் பத்திரம் (கட்டுண்ட பண்டகசாலை அனுமதிப் பத்திரம்) சாட்டுதல் செய்யக்கூடிய அனுமதிப்பத்திரம் ஒன்றாகும். ( )

iv) சுதந்திர வர்த்தகத்திற்கு தீர்வை அல்லாத தடைகளுக்கு உதாரணமாக வியாபார ஒப்பந்தங்கள், கடுமையான வெளிநாட்டுச் செலவாணிக் கொள்கை என்பவற்றைக் குறிப்பிட முடியும். ( )

46. முகாமைத்துவச் செயன்முறையில் முறையற்ற தொடர்பாடலின் மூலம் வணிக அமைப்பிற்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக.

1) ……………………………………………………………………………………………….
2) ……………………………………………………………………………………………….
3) ……………………………………………………………………………………………….
4) ……………………………………………………………………………………………….

47. உற்பத்தித்திறன் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் நான்கு தருக.

1) ……………………………………………………………………………………………….
2) ……………………………………………………………………………………………….
3) ……………………………………………………………………………………………….
4) ……………………………………………………………………………………………….

48. மனிதவள முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் எண்ணக்கருக்களுக்கு பொருத்தமான சொற்பதங்களைக் குறிப்பிடுக.

i) நபர் ஒருவரின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றலைப் பரீட்சிக்கும் பரீட்சையைக் குறிப்பிடுவது. ……………………………………….

ii) புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியரொருவரை தனது தொழில், வேலைக்குழு, வேலைச்சூழல் தொடர்பிலான விளக்கமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் கருமம்.

……………………………………….

iii) அமைப்பின் தொழில் வழங்குநர் ஒருவர் தற்போது ஈடுபட்டுள்ள வேலையினை விட உயர்தரத்திலுள்ள தொழிலொன்றுக்கு நியமிக்கப்படலைக் குறிப்பது.

……………………………………….

iv) குறித்த காலப்பகுதியொன்றினுள் ஊழியர்கள் நிறுவனத்திலிருந்து விலகிச் செல்லும் அளவு.

……………………………………….

49. தரவு ஒழுங்கமைத்தல் செயன்முறைக்குரிய கருமங்களைத் தருக.

1) ……………………………………………… 2) …..…………………………………………………….
2) ……………………………………………… 4) ………………………………………………………..

50. மனித வளத்திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படும் நான்கு விடயங்களைத் தருக.

1) ……………………………………………………………………………………………….
2) ……………………………………………………………………………………………….
3) ……………………………………………………………………………………………….
4) ……………………………………………………………………………………………….